2017 ஜூன் 19] [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், அறிவியல் உபகரணங்கள், கலை மற்றும் கைவினை அறைகள், கணினி அறைகள், நூலகம், கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 39 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், புதிய கலை மற்றும் அறிவியல் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல், புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைக்கு அளித்துவரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர் கல்விக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்துவந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 6 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 65 புதிய கல்லூரிகளும், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் தேசிய சட்டப் பள்ளி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன. எனவேதான், உயர் கல்வியில் தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 24.5 என இருந்தாலும், தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 44.3 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.*

உயர் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:

பிற்பகல் 12–10

1. கல்வியின் தரத்தினையும், மாணாக்கர்களின் அறிவுத் திறனையும் உயர்த்தும்பொருட்டு, கடந்த 6 ஆண்டுகளில் அரசு

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 961 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்மூலம் 2011–2012 ஆம் கல்வியாண்டில் 7,17,442 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2016–2017 ஆம் கல்வியாண்டில் 9,85,974 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளர்ச்சிக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், மாநாட்டு அறைகள், கூட்டரங்கங்கள், கூடுதல் அறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 210 கோடி ரூபாய் செலவில் இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டப்படும் கட்டடங்கள், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்" என்ற பெயரில் அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென, முதற்கட்டமாக இந்த ஆண்டு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 105 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து உயர் கல்வி கற்பதை தவிர்க்கும்பொருட்டும், குறைந்த கட்டணத்தில் உயர் கல்வி பெறுவதற்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 புதிய (மேசையைத் தட்டும் ஒலி) பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2017–2018 ஆம் கல்வியாண்டில் துவங்கப்படும். இதற்காக அரசுக்கு 100 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கர்கள், வேலைவாய்ப்பினை பெறுவதற்குத் தேவைப்படும் புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது. மாநிலத்தில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மாணவர்கள்

மற்றும் அதிகளவில் மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017–2018 ஆம் கல்வியாண்டிலிருந்து 268 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இப்பாடப் பிரிவுகளை கையாள 660 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்காக அரசிற்கு ஆண்டிற்கு 40 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) காஞ்சிபுரத்தில் புதிய விளையாட்டு வளாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் நீச்சல் குள வளாகம், காஞ்சிபுரத்தில் முதன்மை நிலை விளையாட்டு மையம் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் நாட்டின் செல்வம். விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றை கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளைக்கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றது. எனவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளித்த அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்:

1. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு 42 ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் நவீன தரத்துடன்கூடிய புதிய விளையாட்டு வளாகம் ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளாகம் பார்வையாளர் மாடம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அறை, நிருவாக அறை, பயிற்சியாளர் அறை, வீரர்கள் உடை மாற்றும் அறை, கழிவறைகள், சேமிப்பு அறை முதலான வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.